# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 160 — 1975 අප්‍රේල් 18 වැනි සිකුරාදා — 1975.04.18

160 ஆம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | .. 411 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | .. — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் | .. — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | .. — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | .. — | ஏல விற்பனைகள் | . — |
| ஆய விற்பனையும குத்தகை விற்பனையும் | .. — | நானாவித அறிவித்தல்கள் | — |


*கவனிக்க.—தெங்கு அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலமும் மகாவலி அபிவிருத்திச் சபை (திருத்தம்) சட்டமூலமும் 1975 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைக் குடியாசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*வவுனியா நகரத்திலுள்ள அரசாங்க விடுதிகளிலுள்ள வாளி மலசலகூடங்களை நீர்அடைப்பு மலசலகூடங்களாக மாற்றி அமைப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கான அறிவித்தல்*

*வவுனியா மாவட்டத்தில் மேற்படி வேலைகளைச் செய்வதற்காக 1975 ம் ஆண்டு மே மாதம் 06 ந் திகதி மு. ப. 10.00 மணி வரைக்கும் ஏதாவது ஒரு அரசாங்கத் திணைக்களத்தின்கீழ் ரூபா பத்தாயிரம் (10,000/-) பெறுமதி வாய்ந்த அல்லது அதற்கு மேற்பட்ட கொந்தராத்துக்காரர்களாகப் பதிவு செய்தவர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள், வவுனியாக் கச்சேரி கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் கோரப்படுகின்றன.*

*3. கேள்விப் பத்திரப் படிவங்கள் 1975 ம் ஆண்டு மே மாதம் 05 ந் திகதி பி. ப. 2.00 மணி வரைக்கும் வழங்கப்படும்.*

*3. கேள்விப் பத்திரப் படிவங்கள் விநியோகிக்கப்படுமுன் வவுனியா கச்சேரியில் ரூபா 25/- கட்டிய ரசீத்தை அரசாங்க அதிபருக்கு கேள்விப் பத்திரகாரர் சமர்ப்பிக்க வேண்டும். கிராம முன்னேற்றச் சங்கங்களும் ஐக்கிய கூட்டுறவுச் சங்கங்களும் இதற்கு விலக்கப்பட்டுள்ளன.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1975 ம் ஆண்டு மே மாதம் 06 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் திறக்கப்படும்.*

*5. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் உள்ளடங்கிய தபாலுறை 'சீல்' பொறிக்கப்பட்டு இடது கைப்பக்க மேல் மூலையில் "வவுனியா நகரத்திலுள்ள அரசாங்க விடுதிகளிலுள்ள வாளி மலசலகூடங்களை நீர் அடைப்பு மலசலகூடங்களாக மாற்றி அமைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள்" என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபாலில் அனுப்பாதுவிடும் சந்தர்ப்பத்தில், வவுனியா கச்சேரியில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் போடப்படல் வேண்டும்.*

*6. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரகாரர்கள் அவ்வேலைகளைச் செய்து முடிப்பதற்கு இலங்கை தொழிலாளர்களை மாத்திரமே வேலைக்கு அமர்த்தல் வேண்டும். மேலும், அத்தொழிலாளர்கள் இயன்றளவு அவ்வேலைகளைச் செய்யும் பகுதிகளில் இருந்தே தெரிந்தெடுக்கப்படல் வேண்டும்.*

*7. இவைகள் தவிர்ந்த மேலதிக விபரங்கள் அறிய வேண்டியிருப்பின் வவுனியா அரசாங்க அதிபருக்கு எழுதி அறிந்து கொள்ளலாம்.*

*எஸ். சிவஞானம்,*
*வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.*

*அரசாங்க அதிபர் அலுவலகம்,*
*வவுனியா, 1975.04.03.*

4–313—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

*முக்கிய அறிவித்தல்*

***இலங்கைக் குடியாசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.***

***எஸ். டபிள்யூ. பி. பீரிஸ்,***
***அரசாங்க அழுத்தகர்.***

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
***கொழும்பு,***
***1973 ம் ஆண்டு டிசெம்பர் மீ 16 ந் உ***

நீர்ப்பாசன, மின்சார நெடுஞ்சாலைகள் அமைச்சு
கிழக்குப் பிராந்தியம்—மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்ட உறுகாமத் திட்டத்தில் சீர்திருத்த வேலைகள்—முந்தன் குமாரவெளி வான் வால் வாய்காலில் கல் உடைத்து அப்புறப்படுத்தலுக்கான கேள்விகள்.

இலங்கைப் பிரஜைகள் அல்லது இலங்கைப் பிரஜைகளைக் கொண்ட ஸ்தாபனங்களிடமிருந்து மட்டக்களப்பு மாவட்ட உறுகாமத் திட்டத்தில் முந்தன் குமாரவெளி வான் வால் வாய்காலில் கல்லுடைத்து அப்புறப்படுத்துவதற்கான கேள்விகள், நீர்ப்பாசன, மின்சார நெடுஞ்சாலைகள் அமைச்சின் கிழக்குப் பிராந்திய கேள்விச் சபைத் தலைவர் அவர்களால் 1975 வைகாசி மாதம் 14 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

2. நீர்ப்பாசன, மின்சார நெடுஞ்சாலைகள் அமைச்சின் எந்தப் பிராந்தியக் காரியாலயத்திலாவது கேள்வி வைப்புப் பணமாக ரூ. 250/- செலுத்தலினால் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து மட்டக்களப்பு கிழக்குப் பிராந்திய வேலைகள் பணிப்பாளரிடமிருந்து பெற்ற கேள்விப் பத்திரங்களில் 1975 ம் ஆண்டு வைகாசி மாதம் 2 ம் திகதி பிற்பகல் 2 மணிக்கிடையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. முழு விபரங்களை கிழக்குப் பிராந்தியம், மட்டக்களப்பு வேலைகள் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சுப்பிரமணியம்,
வேலைகள் பணிப்பாளர்—கிழக்குப் பிராந்தியம்.

வேலைகள் பணிப்பாளர் பணி மனை,
கிழக்குப் பிராந்தியம்,
மட்டக்களப்பு,
1.4.1975.

4–305 —18.04 75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

சுகாதாரத் திணைக்களம்

பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்—1975

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் எதிராகக் கொடுக்கப்பட்ட காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பத்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சர், யாழ்ப்பாணம் ஏற்றுக்கொள்வார்.

2. **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பத்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகரின் கந்தோரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும். அத்துடன் தங்களிடம் கொந்தராத்து கொண்டு நடத்துவதற்கு ஏற்ற முதலும் சேவையாளர்களும் இருப்பது என்பதையிட்டுக் காரியாதிகாரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற அத்தாட்சிப் பத்திரம் ஒன்று அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கு அல்லது அவைகளை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவிருக்கும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் எனது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப் பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—உத்தேசத் தொகைகள் கீழ்க்காணும் அட்டவணையின் 5 ம் பத்தியில் தரப்பட்டுள்ளன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்ப வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது என்னிடமோ அல்லது கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையில் ஆறுவது பத்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் முற்பகல் பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாடு “ பி ” அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தில் அட்டவணை “ சி ” யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருள்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பத்தியில் சொல்லியிருப்பதுபோல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது. கேள்விகள் முடிவடையும் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு கேள்விக்காரர்கள் தமது கேள்விகளை திறந்து வைத்திருக்க வேண்டும்.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பத்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிப் பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப் படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. (i) கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு $3\frac{1}{2}$ அவுன்ஸ் அரிசி வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) உணவு அட்டவணையில் அரிசியின் அளவு இப்பொழுதுள்ள 9 அவுன்ஸ் அரிசி அளவிலிருந்து 7 அவுன்ஸ் அரிசி அளவாகத் திருத்தப் பட்டிருக்கின்றபடியால் சோற்றுடன் விநியோகிக்கப்படும் பாண் தேவைப்படமாட்டாது.

(iii) விலை குறைக்கப்படாத வீதத்தில் கொத்தொன்று 2 ரூபா 15 சதத்திலோ அன்றி அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையின் படியோ நெற்சந்தைப்படுத்தும் சபையினரால் அரிசி வழங்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு அன்றன்று விதிக்கப்படும் விலைக்குப் பணம் கொடுக்க வேண்டும். நன்கொடையாகவோ அல்லது இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தகாரர்களுக்கு சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தகாரரின் உணவு பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தப்பட வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் குறைக்கப்படாத அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு ஒப்பந்தகாரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக் கப்படும்.

(iv) வேலைக்காரர்களுக்கு அரைச் சாப்பாடு மட்டுமே வழங்கப்படும். (அதாவது இரவு சாப்பாடும் அல்லது மதிய உணவும் காலைத் தேநீரும் அல்லது பிற்பகல் தேநீரும்) பிரதான உணவிற்கு சோறு மட்டுமே வழங்கப்பட வேண்டும். (அதாவது இரவு உணவு அல்லது மதிய உணவு) இந்த உணவிற்காகப் பாவிக்கப்படவேண்டிய அரிசியின் அளவு $4\frac{1}{2}$ அவுன்சாகும். இந்த உணவிற்காக கூப்பன்கள் பெறப்படலாகாது.

(v) கூப்பன்களிலிருந்து பெறப்பட்ட அரிசி இனமாகா இருந்தால் அரிசியின் முழுப் பெறுமதியும் ஒப்பந்தக்காரரிடமிருந்து கழிக்கப்படும்.

(vi) வேலைக்காரர்களுடைய வாராந்த உணவுத் திட்டம் பின்வருமாறுரும் :—

| | | |
|---|---|---|
| மீன் உணவு | .. | .. 1 நாள் |
| கருவாடு உணவு | .. | .. 2 நாட்கள் |
| முட்டை உணவு | .. | .. 1 நாள் |
| மரக்கறி | .. | .. 3 நாட்கள் |

14. நெல் சந்தைப்படுத்தும் சபையிலிருந்து அல்லது ப. நோ. கூ. சங்கத்திலிருந்து அல்லது கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அரிசி ஏற்றுமதி செலவைத் தங்கள் சொந்தச் செலவிலேயே ஏற்கவேண்டும்.

15. மீளவாயப்பட்ட உணவு விநியோக விபரம் கேள்வி ஒப்பந்த படிவத்துடனுள்ள இணைப்பில் பார்வையிடலாம். மீளவாயப்பட்ட வா^ர உணவுத்திட்டம் நோயாளர்களுக்கு பின்வரும் அடிப்படையிலமையும் :—

| | | |
|---|---|---|
| மரக்கறி உணவு | .. | .. 1 நாள் |
| முட்டை உணவு | .. | .. 4 நாட்கள் (மத்தியான உணவு) |
| மீன் உணவு | .. | .. 2 நாட்கள் (மத்தியான உணவு) |

இராப்போசனம் எல்லாம் மரக்கறி உணவே. கருவாடும் மாட்டிறைச்சியும் மாற்றுணவாயமைய வாரத்தில் 4 முட்டை உணவும், 2 மீன் உணவும் மத்தியான உணவாக வழங்கப்படும். 2 அவுன்ஸ் உடன் மீன் அல்லது ஒரு முட்டைக்குப் பதிலாய் கருவாட்டுணவில் $1\frac{1}{2}$ அவுன்ஸ் கருவாடும் மாட்டிறைச்சியுணவில் 2 அவுன்ஸ் மாட்டிறைச்சியும் மாற்றுணவாயமையும். காசநோயாளர்க்கென அங்கீகரிக்கப்பட்ட உணவுக்கிரமத்தின் பிர காரம் மேலதிக முட்டையொன்று அவர்களுக்கு வழங்குவது நீங்கலாக ஏனைய நோயாளர்களுக்கு சகல இராப் போசனமும் மரக்கறியுணவாகவே யமையும். பாண் அல்லது கிழங்கு வகைகள் அரிசியுணவின் மாற்றுயமையுமிடத்து மீளவாயப்பட்ட உணவுக் கிரமப் பட்டியலின் கீழ்க் குறிப்பின் படியே அவையுமமையும்.

16. **அரிசி.**—நோயாளிகளாலும் வேலையாட்களினாலும் ஒப்படைக்கப்பட்ட கூப்பன்களின் பொருட்டு உணவுத் திணைக்களத்திலிருந்து உதவிப்பண விதத்தில் அல்லது இலவசமாக அரிசி 19.12.66 ல் இருந்து பெறக்கூடியதாக அனுமதிச்சீட்டு நிலையத் தலைவரால் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.

பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

யாழ்ப்பாணம்,
1975 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 04 ந உ.

**குறித்த அட்டவணை**

| 1 | 2 | 3 | 4 | 5 | | | | | | | | | | 6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | | | | |
| | | | | வேலைக்காரர்கள் | | | | | நோயாளிகள் | | | | | |
| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விக் காலம் | மீன் | மாட்டி றைச்சி | கரு வாடு | முட்டை | மரக் கறி | மீன் | மாட்டி றைச்சி | கரு வாடு | முட்டை | மரக் கறி | கேள்விகள் மூடப்படுட் திகதி |
| 1. மண்டைதீவு, பி. வி. .. | 100 | 200 | 21.5.75 முதல் 31.12.75 வரை | 170 | — | 140 | 260 | 260 | 170 | — | — | 300 | 85 | மு.ப. 10.00 14.5.75 |
| 2. வேலணை பி. வி. .. | 100 | 200 | | 215 | — | 60 | 350 | 250 | 425 | — | — | 825 | 175 | |

### 1975 ம் நிதியாண்டில் வெலிக்கடைச் சிறைச்சாலையின் கைத் தொழில் பகுதிக்கு மூலப்பொருட்கள் வழங்குவதற்கான கேள்விகள்

1975-ம் நிதியாண்டில் கீழே குறிக்கப்பட்டுள்ள பொருட்களுக்காய கேள்விகள் கொழும்பு 9 இலுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையின் கைத்தொழிற் பகுதியால் 15 ம் திகதி மே மாதம் 1975 ம் ஆண்டு காலை 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் இலங்கையர்களிடமிருந்தே ஏற்றுக்கொள்ளப் படும்.

3. பொருட்களும் அவற்றிற்காய கேள்விப்பத்திரப் பிணைப் பணம், கேள்விப்பத்திர வைப்புப்பணம் பற்றிய விபரங்கள் பின் வருமாறு :—

| | விநியோகிக்க வேண்டிய பொருட்கள் | கேள்விப் பத்திர வைப்புப்பணம் ரூ. ச. | பிணைப் பணம் ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | சுத்தப்படுத்திய தென்னம் ஈக்கு | 20 0 | 200 0 |
| 2. | பன் புல்லு | 20 0 | 300 0 |
| 3. | தென்னம் தும்பு தனிப்பட | 20 0 | 200 0 |
| 4. | தும்பு மெத்தைக்கு | 20 0 | 200 0 |
| 5. | சிரட்டைக் கரி | 20 0 | 200 0 |

4. விசேட விதிகள்.—வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லும் பொருட்கள் பற்றியது :—

(1) துப்பரவாக்கி, பதப்படுத்திக் காய விடப்பட்ட நீள ஈக்குகள் ஒவ்வொன்றின் நீளம் 3 அடி ஆக இருத்தல் வேண்டும். இதில் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(2) கைத்தறிப் ப்ாயைப் பொறுத்தமட்டில் 3½ அடி நீளமானது தேவைப்படும். இதில் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(3) நன்கு துப்பரவாக்கப்பட்டுக் காய விடப்பட்ட தூசில்லாத துடைப்பம், தூரிகை என்பன செய்வதற்குத் தேவைப் படுவனவையாகும். இதில் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(4) நன்கு துப்பரவாக்கப்பட்டுக் காய்ந்த மாசுகள் இல்லாத முதலாம் தரமான பாய் வகைகள் செய்வதற்கு தேவைப் படுவனவையாகும். இதில் 5% கழிவாக ஒதுக்கப்படும்.

(5) நடுத்தரமாய் எரியக்கூடியதாயும் தூள்கள் இல்லாததாயும் சிரட்டைக்கரியானது இருத்தல் வேண்டும். பெருந் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்காக ½" சதுரத்திற்குக் குறைந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தூள்கள் சேதம் எனின் முழுவதின் 5% கழிவாக ஒதுக் கப்படும்.

5. மூன்றும் பந்தியால் குறிப்பிட்ட பொருட்களில் சிலவற்றிற்கோ அன்றி முழுவதற்குமோ கேள்விகள் கோரலாம்.

6. பொருட்களின் மாதிரிகளைப் பெயர், விலாசம் எழுதிய வெவ்வேறு உறைகளில் இட்டு இதன் கீழ்க் கையொப்பம் இட்டவரிடம் ஒப்படைக்க வேண்டும். கேள்விகளின் இறுதித் தினத்திற்குப் பிந்திய மாதிரிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. இறப்பரினுல் ஆன சோல்கள், நீல்கள் என்பவற்றின் மாதிரிகளை ஒப்படைக்கும் இடத்து அவை இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தவை என்பதைக் காட்டும் பொருட்டு மேற்படி இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தின் அடையாளமுடையதாய் இருத்தல் வேண்டும்.

7. கேள்விப் பத்திரங்கள் பெறும் வகையில் மீளப் பெறக்கூடிய வைப்புப் பணத்தைப் பின்வரும் நிலையங்கள் செலுத்த வேண்டிய அவசியமில்லை :—

(அ) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ;

(ஆ) வேறு அரசாங்கத்தின் அரசாங்க விற்பனை நிறுவனங்கள் ;

(இ) உள்ளூர் அபிவிருத்திச் சபைகள் (கூட்டுறவு அபிவிருத்திச் சபை அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டவை) ;

(ஈ) கூட்டுறவுச் சபையால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங் சங்கங்கள்.

8. கேள்விகள் யாவும் 14 ம் திகதி மே மாதம் 1975 ம் ஆண்டு பிற்பகல் 2 மணி வரைக்கும் கிடைக்கக்கூடிய பத்திரங்களில் கீழே கையொப்பமிட்டவருக்கு அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்கள் அவற்றிற்குரிய வைப்புப் பணத் தொகையைச் செலுத்துவதற்காய பற்றுச் சீட்டைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். இவ் வைப்புப் பணத்தை, ஆணையாளர், சிறைச்சாலைப் பகுதி, கொழும்பு 9 என்ற முகவரிக்கு நேரடியாகச் செலுத்தலாம். அல்லாவிடின் கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரியில் செலுத்தலாம்.

9. கேள்விப் பத்திரங்கள் யாவும் மூடப்பட்ட அரக்கு முத்திரையிட்ட உறைகளில் "....................க்கான கேள்விகள்" என அதன் இடது பக்க மேல் மூலையில் குறித்துப் பதிவுத் தபாலில் அல்லது இவ்வலுவலகத்தின் கேள்விப் பத்திரத்திற்கான பெட்டியில் கீழே கையொப்பமிட்டவருக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கலாம்.

10. கேள்விகளின் விலைக் குறிப்பீடுகள் யாவும் இலக்கத்திலும் தெளிவான எழுத்திலும் காட்டப்படல் வேண்டும். விலைக் குறிப்பீடுகள் இலக்கத்திலும் சொற்களிலும் காட்டப்படாவிடத்துக் கேள்விகள் மறுக்கப்படும். ஏதாவது மாற்றங்கள் புகுத்துதல் செய்ய நேரின் அவை கேள்விக்காரரின் முதலெழுத்துக்களால் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

11. கேள்விகள் யாவும் 15 ம் திகதி மே மாதம் 1975 ம் ஆண்டு காலை 10.35 மணிக்குக் கீழே குறிப்பிட்ட அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர்கள் அங்கு பிரசன்னமாய் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

12. கொந்தராத்துக்காரர்களால் மதிப்பிடப்பட்டு அப்பொருட்களை அவர் சிறைச்சாலைக் கைத்தொழில் அதிபரால் வழங்கப்படும் காலத்தில் சமர்ப்பிப்பதற்குத் தவறினுல் மேற்படிச் சிறைச்சாலைக் கைத்தொழிற் பகுதி அதிபருக்கு எங்கிருந்தோ பொருட்களைக் கொந்தராத்துக்காரர்கள் அப்பொருட்களைக் கொண்டு வந்து கொடுப்பதற்குக் கட்டளையிடவோ அல்லது அதற்குரிய தண்டனைப் பணத்தை அவர் தவறும் ஒவ்வொரு நாளுக்கும் விதிக்கவோ உரிமை உண்டு.

13. சித்திபெறும் கேள்விக்காரர் இலங்கையர்களையே வேலைக்கு அமர்த்தலாம்.

14. கேள்விகள் சிலவற்றையோ அன்றி முழுவதையுமோ அல்லது கேள்வியின் பின் நடைமுறையில் இருக்கும் பொருட்கள் விநியோகத்தைத் தடுத்து நிறுத்தவோ, இரத்துச் செய்யவோ சிறைச்சாலைப் பகுதிக் கைத்தொழில் அதிபருக்கு உரிமை உண்டு.

15. சித்தி பெறும் கேள்விக்காரர்கள் அறிவித்தல் கிடைத்த தினத்தில் இருந்து பத்து நாட்களுக்குள் சிறைச்சாலையின் கைத்தொழிற் பகுதியின் அதிபரின் உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடுவதற்குத் தயாராய் இருக்க வேண்டும். தவறின் இவரது கேள்விப் பத்திரப் பணம் முடிக்குரிய சொத்தாக்கப்படுவதோடு இவரின் பெயரும் விலாசமும் தடுத்து நிறுத்தப்பட்ட கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் சேர்க்கப்படும்.

16. அவசியமேற்படுமிடத்து, மேலும் தேவையான விபரங்களை இதன் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். யே. என். யோர்டன்,
அதிபர்,
சிறைச்சாலைக் கைத்தொழிற் பகுதி.

கைத்தொழிற் பணியகம்,
வெலிக்கடைச் சிறைச்சாலை,
கொழும்பு.

4-281—18.04.75 ந திகதிய வர்த்தமானி இல. 160

### இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

இலங்கைப் புகையிரதத்திணைக்களத்திற்குத் துளையிடும் யந்திரம் (Boring Machine) வழங்கலுக்கான கேள்விப்பத்திரங்கள் யூலை மாதம் 17 ந் தேதி முற்பகல் 11 மணிவரையும் புகையிரதப் பகுதி, தலைமைக் காரியாலய கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும். (முகவரி :—தலைவர், கேள்விச்சபை, புகையிரதப் பகுதி, தலைமைக் காரியாலயம், த. பெ. எண் 355, கொழும்பு 10).

2. கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன்பதாக ஒப்பந்தக்காரர்கள் மேற்படி சேவையைத் திருப்திகரமாக ஆற்றுவதற்கு வேண்டிய நிதி ஆற்றல் உண்டு என்பதை உறுதி செய்வதற்கு, தேவையேற்படின், விபரங்களும், சான்றுகளும் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவர்.

3. புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், த. பெ. எண் 1347, கொழும்பு 10 இல் இருந்து பெறப்படும் பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. பிரதான கணக்காளர் அலுவலகம், இலங்கைப் புகையிரதத் திணைக்களம், மருதானையில் அல்லது கொழும்புக்கு வெளியேயாயின் எந்தவொரு கச்சேரியிலாகுதல் கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 100/- செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் யூலை மாதம் 15 ம் தேதி பிற்பகல் 2.30 வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

5. 17.07.75 அன்று முற்பகல் 11.05 மணிக்கு இலங்கைப் புகையிரதப் பகுதி தலைமை அதிபர் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தோர் சமூகமளிக்கலாம்.

6. முழு விபரங்களும் புகையிரதக்களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எம். சறீன்,
பொது முகாமையாளருக்காக,
இலங்கைப் புகையிரதத் திணைக்களம்.

18.04.75.

4-357—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

### கடற்றொழில் திணைக்களம்

#### வெளியிணை மோட்டார்களை இறக்குமதி செய்வதற்காய கேள்விகள்

கடற்றொழில் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு விற்பதற்காக வெளியிணைப்பு மோட்டார்களை இறக்குமதி செய்வதற்குச் சலுகை பெறுவதற்கான கேள்விப்பத்திரங்கள் வெளிநாடுகளில் உள்ள வர்த்தகத் தாபனங்களின் உள்நாட்டுப் பிரதிநிதிகளிடமிருந்து 1975 ம் ஆண்டு ஜூன் மாதம் 19 ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10..00 மணிவரை கொழும்பு 3, காலிமுகம், சேர் முகம்மது மாக்கான் மார்க்கார் மாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 3, காலிமுகம், சேர் முகம்மது மாக்கான் மாக்கார் மாவத்தையிலுள்ள கடற்றொழில் திணைக்கள பணிப்பாளரிடமிருந்து பெறக்கூடிய கேள்விப் பத்திர சாதனங்களில் குறிப்பிடப்பட்ட படிவங்களில் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்படல் வேண்டும். இதற்கான சாதனங்கள் 1975 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ந் திகதி நண்பகல் 12 மணிவரையும் வழங்கப்படும்.

திருப்பியளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- ஐ கொழும்பு 3, காலி முகத்திலுள்ள, கடற்றொழில் திணைக்களத்தில் பணமாகச் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டை, மேற்படி சாதனங்களைப் பெறுவதற்குமுன் சமர்ப்பிக்கவேண்டும்.

ஏனைய விபரங்களை கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் பணிப்பாளரின் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் பணிப்பாளர்.

கடற்றொழில் திணைக்களம்,
காலிமுகம், கொழும்பு 3.

4-345—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1975

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் .. .. | வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் .. | செவ்வாய் | 25.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் .. | புதன் | 2.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் .. | புதன் | 9.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் .. | புதன் | 16.4.75 |
| மே | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 23.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 30.4.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 7.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 14.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் .. | புதன் | 21.5.75 |
| யூன் .. .. | வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் .. | புதன் | 28.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் .. | புதன் | 4.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் .. | புதன் | 11.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் .. | புதன் | 18.6.75 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.